

நல்லூர் மகோற்சவ
சிறப்பிதழ்

# முகம்



வெளியீடு
புதிய
முகவரி 2017
PUTHIYA MUHAVARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகாமி மஹால்

நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட மண்டபவசதி





Online Booking: WWW.Shivahamimahal.com

திருமணம்

பிறந்தநாள்

பூப்புனித நீராட்டு விழா

ஒன்றுகூடல்கள்

ஏனைய பொது நிகழ்வுகள்

*Adiyapatham Road, Thirunelvely,*
*T.P : 021 205 2288*
*Mobile : 077 9326147*
*Email : Sivakaamymakal@gmail.com*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திர குப்தனின் மகத்துவங்களோடு சிறப்பாறை சித்திராப்பூரணை




சைவப்பெருமக்கள் எமது சைவசமயத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள நமது இந்து மதப் பண்டிகைகளைப் பற்றியும் விரதங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இவற்றைச் சரியான முறையில் அறிந்து செய்தால் நமக்கு நற்பலன்கள் கிட்டும் நம்முன்னோர்கள் நம் வாழ்க்கையில் ஒவ்வொன்றையும் திட்டமிட்டே நடைமுறைப்படுத்தினர். விரதங்களை ஒழுங்காகக் கடைப் பிடித்தால் பாவங்கள் நீங்கும், மனப்பக்குவம் ஏற்படும்.

இந்த தர்மநெறிகள் மீதும் சாத்திரங்கள் மீதும் நம்பிக்கை கொள்வதால் நமக்கு அடக்கமும் எளிமையும் ஒழுக்கமும் தானாகவே வந்து சேருகின்றன. அந்த வகையில் ஈழத்தில் யாழ்ப்பாண திருநாட்டில் திருநெல்வேலியில் மலரும் "இந்து முகம்" என்னும் இந்துக்களின் சஞ்சிகையில் "சித்திராப் பௌர்ணமி, வைகாசி விசாகம்" போன்ற திருநாட்களின் பெருமைகளை அறிவோம்.

## சித்திராப் பௌர்ணமி

ஆண்டுதோறும் வருடத்தின் முதலாவது மாதமாக பிரசவமாகும் சித்திரை தமிழ்ப்புத்தாண்டு வருடத்தின் ஆரம்பமாகவும் அமைகின்றது. ஒவ்வொரு மாதமும் பூரணையும், அமாவாசையும் வருகின்றன. தாயை இழந்தவர்கள் பூரணையையும், தந்தையை இழந்தவர்கள் அமாவாசையும் விரத தினமாக அனுஸ்டித்து தமது தாய் வழியினருக்கும், தந்தை வழியினருக்கும் பிதிர்க்கடன் நிறைவேற்றி வரும் மரபு இந்து மக்களிடையே பேணப்பட்டு வருகின்றது.

அதிலும் சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமியும், ஆடி மாதத்தில் வரும் அமாவாசையும் மிக முக்கிய பிதிர்க்காரியத்தை நிறைவேற்ற மிக உகந்த தினமாக அனுஸ்டிக்கப்படுகின்றது. சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரமும், பௌர்ணமியும் சேர்ந்து வரும் நாட்கள் சித்திரக்குப்தர் விரத வழிபாடுகளுக்குரிய நாளாகவும், சித்திராப் பூரணை விரதம் வழிபாட்டு நாளாகவும் அமைந்து விடுகின்றன.


இத்தினத்தில் இந்துக்கள் தமது ஆலயங்கள் தோறும் சித்திரபுத்திர நாயனார் கதை படித்தும், சித்திராக் கஞ்சி வார்த்தும் இயன்றளவு தானதர்ம வழிபாடுகளில் ஈடுபடுவார்கள்.

சித்திர மாத பௌர்ணமி அன்றே சந்திரன் முழு வலிமை பெற்று முழுக்கிரகணத்தையும் சித்திரையின் இரணத்தோடு சேர்த்து பூமிக்கு அளிக்கின்றான். இது போல் வேறு எந்த நாளிலும் ஏற்படாத வகையினால் இந்நாள் சிறப்புடையதாகும்.

சித்திரை மாதம் சித்திரை நாளில் சித்திரப்புத்திரனார் தோன்றினார். எனவே அன்று கொண்டாடப்பெறும் விரதம் சித்திர குப்த விரதம் என்பர். அவரவர்களின் பாவ புண்ணியங்களைக் கணக்குக் எடுத்து கொடுக்கும் பணி சித்திரக்குப்த நாயனாரின் பணியென்று இந்து மத சாத்திரங்களில் கூறுகின்றனர். நாம் செய்யும் குற்றங்களை சித்திரம் போல் இரகசியமாக தன் மனதில் நிலை நிறுத்திக் கொள்வதனால் இவருக்குச் சித்திரக்குப்தனார் எனப் பெயர் வந்ததாகவும் கூறுவார்கள்.

இறைவனின் வேண்டுகோளுக்கமைய சித்திரக்குப்தன் ஜெமதர்மராஜாவின் பிரதான கணக்குப்பதிவாளராக மக்களின் நல்வினை, தீவினைகளை பகுத்தறிந்து ஒப்புவித்து பாவ புண்ணியங்களை வகுப்பதற்காக சூரமுனிவர் எடுத்துக் கூறுகின்றார்.

திருவிளையாடல் புராணத்தில் தெய்வேந்திரன் பூமியில் வந்து சிவபூஜை செய்து மீண்டும் இந்திரலோகம் சென்ற தினம் சித்திரைப்பூரணையென்றும், இச் சித்திரைப்பூரணையில் இந்திரனும் இந்திராணியும் விரதம் அனுஸ்டித்ததன் பலனாக தமக்குரிய புத்திரப் பாக்கியத்தைப் பெற்றதாகவும் இச் சித்திராப்பூரணை தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது. இந்நாளில் நாமும் சித்திரகுப்தனரைப் போல மாவினால் கோலம் இட்டு அவரின் கையேடும், எழுத்தாணியும் அமைத்துப் பூசை செய்யலாம். இத்தினத்தில் உப்பு, பால், மோர் சேர்க்காமல் பகல் மட்டும் உண்டு விரதம் அனுஸ்டிப்பதால்பல வகையான ஐஸ்வரியச் சிறப்புக்களைப் பெறலாம்.



வர்ணனைக்கலாநிதி
மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்
பணிப்பாளர் சைவத்தமிழ் பண்பாட்டு பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையகத்தை வாழ்விக்க உதித்த வைகாசி விசாகம் முருகன்



"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாயொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியகாக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்ட
ஒரு திரு முருகன் வந்தாங்குதித்தனன் உலகமுய்ய"

சோதிப் பிழம்பின் திருப்பெரு வடிவம் அழகாக வர்ணிக்கப்படுகிறது அருவம் உருவம் ஆகிய பொருளாகவும் அநாதியாதியான பொருளாகவும் பலவாகக் காட்சிதரும் பொருளாகவும் ஒன்றாக ஏகமாகத் தனிமுதலாகிய பொருளாகவும் விளங்கும் பிரம்மமான சோதியான ஈசன் தாமே ஒரு திரு மேனியாகிக் கருணை கூர் முகங்கள் ஆறும் கொண்டமைந்ததுடன், பன்னிருதிருக் கரங்களையும் கொண்டு இந்த உலகமானது உய்தியடையும் பொருட்டாக வந்து தோன்றினான் உதித்தனன் என்று மிக மிகச் சிறப்பாகக் கூறுகின்றார்.

தனி மனித மேம்பாட்டுக்கான அவதாரமல்ல முருகன் அவதாரம் என்பதையே "உதித்தனன் உலகமுய்ய" என்று கூறுவதால் உணர்த்தி அனைவரது இடுக்கண்களையும் கறைந்தெளிதற்குரிய தோற்றமே முருக அவதாரம் என்ற கருத்தை முன்வைத்து உலகுக்குயிராக்கிக் காட்சியமைக்கின்றார் கச்சியப்ப மாமுனிவர்.

காசினிக்கே வாழ்வுதர கருணைத் திருவுருவாய்க் வைகாசி விசாகனாக வையகத்தை வாழ்விக்கத் திருவவதாராம் செய்தான் முருகன். சிவபெருமானிடம் தேவர்கள் முறையிடக் கருணையினால் சிவபெருமான் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றியவர் கந்தபெருமான். சிவபரஞ்சுடரின் ஆறு நெற்றிக்கண்ணிலே இருந்து தோன்றிய ஆறு நெருப்புப் பொறிகளும் ஆகாயம் எங்கும் பறக்கத் தேவர்கள் அஞ்சினர்.

அந்நெருப்புப்பொறிகளை காற்றுக்கடவுளிடம் தந்தனர். காற்றும் ஆற்றொணாது நெருப்புக்கடவுளிடம் கொடுக்க, நெருப்புக்கடவுள் தண்ணீராகிய கங்கையிடம் தர, கங்கை தாங்கமாட்டாமல் சரவணக்காட்டிலே வைக்க அங்கு ஆறு குழந்தைகளாகத் திருவுருக் கொண்டு சரவணத்தடாகத்திலே தாமரைத் தவசில் உதயம் செய்ய கார்த்திகைப் பெண்களால் பாலூட்டித்தாலாட்டி முருகனை வளர்த்தனர்.

சிவபெருமான் உமாதேவியாரோடு சரவணத்தடாகத்திற்குச் செல்ல உமாதேவியார் ஆறு குழந்தைகளையும் ஒன்றாக அணைக்க ஆறுமுகமும், பன்னிரண்டு தோளும், இரண்டு திருவடியுமாக முருகப்பெருமான் விளங்கினார். ஒன்றாகச்சேர்த்த அந்த முருகக்குழந்தைக்கு "கந்தன்" எனப் பெயர் சூட்டினார் உமாதேவியார்.

எந்த உலகத்தும் தாயார் பெற்றெடுத்த குழந்தைக்கு தந்தை பெயர் வைப்பது வழக்கம். முருகக் குழந்தையை சிவபெருமான் நெற்றிக்கண்ணிலே இருந்து தந்தார். தாயாராகிய பார்வதி தேவியார் கந்தன் என்று பெயர் வைத்தார்கள். அந்தக் கந்தன் பெயரே முருகனுடைய பல்லாயிரம் நாமங்களில் உமாதேவியார் வைத்த நாமம் ஆகையால் முருகன் வரலாற்று நூலுக்கு ஆசிரியர் "கந்தபுராணம்" என்றே வைத்தார். முருகன் அடியார்களில் சிறந்தவராகிய அருணகிரிநாதரும் கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தர் அந்தாதி என்றே அமைத்தார்.

குமரகுருபர சுவாமிகளும் "கந்தர் கலிவெண்பா" என்றே பாடியருளினார். கருணைகூர் முகங்கள் ஆறும் கொண்ட கந்த பெருமானை கருணைக்கடல் என்று கந்தர் அலங்காரம் முதல் பாடலில் அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார். அன்பர்களுடைய மலமாசாகிய பிரபஞ்ச கேற்றைக் கழுவச் சிவபெருமான் கங்கை ஆற்றைச் சூடியுள்ளார். அவருடைய திருக்குமாரராகிய கந்தபெருமான் கருணைக்கடலாக விளங்குகின்றார்

வர்ணனைக்கலாநிதி.மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்
(சர்வதேச தெய்வீக வர்ணனையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழினத்திற்கு தீர்வு தந்து வாழ்விக்க தேரேறிவர வேண்டும் நல்லைக் கந்தனே!

சரித்திரப் பிரசித்தி பெற்ற அலங்காரக் கந்தனாக தமிழ் மண்ணாம் யாழ்ப்பாணத்தில் நல்லையெம் பதியில் பன்னெடுங் காலமாக அருளாட்சி செய்து வரும் நல்லைக் கந்தனின் தேர்த்திருவிழா இலட்சோ மக்கள் மத்தியில் இந்திர விழாப் போல நடைபெறும்.

தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோவில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழருக்கும் இடையிலுள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாள் பட்டதெனலாம். ஈழத்திலே கருணைக் கடலாகிய முருகன் கதிர்காமத்திலும், நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், கந்தவனக்கடவை, மண்டூர், சித்தாண்டி, வெருகல் முதலிய புண்ணிய தலங்களில் கோயில் கொண்டு அருள்பாலித்து வருகின்றான்.


யாழ்ப்பாண மண்ணிலே வைத்தமிழ் மரபின் குன்றாக விளங்குவது நல்லூர்-தமிழ் மன்னர்களின் இராச தானியாகப் போற்றப்படுகின்றது. சைவமக்களும், சைவ மன்னர்களும் வணங்கிய கீர்த்தி வாய்ந்த முருகன் ஆலயச் சிறப்பினை நல்லூர் பெற்று விளங்குகின்றது.

தமிழ் நாட்டை அரசர்கள் பலர் தம் பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உருவாக்கினார்கள். பாண்டி நாட்டில் வீரபாண்டிய நல்லூர், அரிகேசரி நல்லூர், மானாபரண நல்லூர், செய்துங்க நல்லூர் முதலிய ஊர்கள் பாண்டிய குலத்தைச் சேர்ந்த மன்னர் பெயரை விளக்கு நிற்கின்றன. சோழ நாட்டின் பெருந் சோழ மன்னர்கள் உண்டாக்கிய நல்லூர்களைச் சாசனங்களில் காணலாம்.

முடி கொண்ட நல்லூர், அநாய நல்லூர். திருநீற்றுச்சோழ நல்லூர், திருத்தொண்டர் தொகை நல்லூர், சிவபாத சேகர நல்லூர், கலிகடிந்த சோழ நல்லூர் முதலிய நல்லூர்கள் சோழ மன்னருடைய விருதுப் பெயர் பெற்ற பதிகள் ஆகும்.

ஈழத்திலும் நல்லூர் எனப் பெயருடைய இராமங்கள் ஐந்துள்ளது. மற்றைய நாலும் பூநகரியிலும், குரு நாகற் பகுதியிலும், களுத்துறையிலும் உள்ளனவாம், இத்தகு "நல்லூர்" என்ற பெயர் பல கிராமங்களுக்குச் சூட்டப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண நல்லூரை எண்ணுகின்ற பொழுது அங்கே நல்லைக் கந்தன் ஆலயம் தான் எம் மனக்கண் முன்னே தோன்றுகின்றது.

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீர வேல் செவ்வேள் திருக்கை வேல் - வாரி
குளித்த வேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை"



முருகனுடைய கையிலே இருப்பது வேல் இது ஞான சக்தி வேலாகும். அஞ்ஞானப் பகையை வெல்ல ஞான வேல் தாங்கியுள்ளவன் முருகன் தனி வழி நடக்கும் பக்தர்களுக்கு வலப்புறத்தும் இடப்புறத்தும் முன்னும், பின்னும் எங்குமாகி இரவு பகலில் துணையாக விளங்குவது வேல் என்கிறார் அருணகிரிநாதர். இத்தகு வரலாற்றுப் பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட வெற்றிவேலே நல்லூர் கந்தசுவாமி கோவில் மூலஸ்தானத்தில் காட்சியளிக்கின்றது. முருகப் பெருமானிடத்திலே அமையும் கருணை அனைவராலும் விரும்பி அனுபவிக்கப்படுவதாகும். எவரெவர்க்கு எவ்வெவ்வாறெல்லாம் அருள் புரிய வேண்டுமென்ற கருணை உள்ளம் கொண்ட கலியுக வரதன் கந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள். உலகிலே உள்ள இயல்புகளெல்லாம் கொண்டு இயற்கையுடனானவனாகவும், விளங்குபவன் ஆறுமுகன். அடியவர்கள் வருந்தியழைக்கும் போதெல்லாம் வேலோடும் மயிலோடும் தோன்றி அருள் புரிபவன் ஆறுமுகன். ஐந்து முகங்களையுடைய சிவப்பரம் பொருளினால் தோற்றுவிக்கப்பட்டவன் ஆறுமுகன்.

முருகனை செந்தமிழாலும் பாடி வழிபடலாம். கொடுந்தமிழாலும் பாடலாம். ஏனெனில் தமிழாலே வைது நிந்தித்து பாடினாலும் அதனைப் பெருமனதோடு ஏற்றருளுபவன் முருகன் இதனாலேயே "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" என்கிறார் அருணகிரிநாதர்.


"செயலாலே தீயவை புரிந்தாரேனும் குமரவேல் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்" என்று கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுகின்றார். சிவபெருமானது நெற்றிக் கண்ணிலேயிருந்து அக்கினிய பொறியாகச் சரவணப் பொய்கையிலே உதித்தவன் ஆறுமுகன்.

இத்தகு சிறப்புக்களோடு நல்லூரினும் விற்றிருந்து அருள்பவன் திருத்தேரிலே பவனிவரும் திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைகின்றது. ஈழத்தமிழினத்துக்கு வாழ்வு தர வேலேந்தி மயிலேறி பவனி வரவுள்ளான்.

தெய்வீக ஞானத்தமிழருவி வர்ண்னைக் கலாநிதி
மதுரகவி. காரை. எம்.பி. அருளானந்தன் **J.P**
பணிப்பார். சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்,
(வர்ணனையாளர், டான்**T.V**, ஓம்**T.V**)

## தமிழ் வடிவாய் வந்த தலைவர் போற்றி

தமிழ் வடிவாய் வந்த தலைவா் போற்றி
தமிழ் வடி வாய் வந்த தலைவா போற்றி
தமிழ்க்குடியை காக்கின்ற இறவைா போற்றி
உமை என்றும் உளம்மறவா உயிரே போற்றி
ஓமென்ற மந்திரத்தின் உணர்வே போற்றி
இமைத்திடுமுன் எம் கவலை தீா்ப்பாய் போற்றி
எழில் மயிலில் பறந்து வரும் இளையோய் போற்றி
தமிழ்க் கவிதை தனிந் பிறந்த தலைவா போற்றி
தனை வணங்கும் யாவர்க்கும் அருள்வாய் போற்றி
தமிழுக்கோர் தெய்வமென முருகா வந்தாய்
தரணிக்கோர் இறையாகிக் கந்தா நின்றாய்
உமையவளின் திருமகனாய் உலகம் கண்டாய்
ஓங்கார பொருளனைத்தும் உளத்திற் கொண்டாய்
அமிழ்தம் எனும் தமிழுக்கே அழகைச் சேர்த்தாய்
அழகுக்கு அழகாக அவதரித்தாய்
தமை வணங்கும் யாவற்க்கும் அருள் வந்தாய்
தமிழ் நல்லை பதியில் வந்து அமர்ந்தாய் ஐயா.



செல்வி. கலாநிதி. அருளானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூலோக கைலாசத்தில் கொடியேற்றப் பெருவிழா

நல்லூர் கந்தசுவாமி கோயிலைக் கட்டியவன் புவனேகவாகு என்பது "கைலாய மாலையில் வருகின்ற பின்வரும் தனிச் செய்யுளால் அறிய முடிகின்றது.

"இலக்கிய சகாத்த மெண்ணூற்றெழுபதாமாண்டதெல்லை
அலர்பொலி மாலை மார்ப்பணாம் புவனேகவாகு
நலமிகும் யாழ்ப்பாணத்து நகரிகட்டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்டுக் கோயிலும் புரிவித்தானே"

பன்னெடுங்கால வரலாற்றுச் சிறப்பையும் நல்லூர் மாண்பினை என்றென்றும் எடுத்து இயம்பியிருக்கும் நல்லை முருகன் பெருமையும், மகோற்சவ சிறப்பும் தத்துவமானது.

## நல்லூர்

"நல்லூர்" என்ற சொல்லை அவதானிக்குமிடத்து தமிழ் நாட்டை ஆண்ட அரசர் பலர் தம்பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உருவாக்கினார்கள். பாண்டி நாட்டில் வீரபாண்டிய நல்லூர், அரிகேசரி நல்லூர், மாணாபரண நல்லூர், செய்துங்க நல்லூர், முதலிய ஊர்கள் பாண்டியகுலத்தைச் சேர்ந்த மன்னர் பெயரை விளக்கி நிற்கின்றன.

சோழநாட்டின் பெருஞ்சோழ மன்னர்கள் உருவாக்கிய நல்லூர்களைச் சாசனங்களில் காணலாம். முடி கொண்ட நல்லூர், அநபாய நல்லூர், திருநீற்றுச் சோழ நல்லூர், திருத்தொண்டர்தொகை நல்லூர், சிவபாத சேகர நல்லூர், கலிகடிந்த சோழ நல்லூர் முதலிய நல்லூர்கள் சோழ மன்னருடைய விருதுப் பெயர் பெற்ற பதிகளாகும்.

ஈழத்திலேயும் நல்லூர் எனப் பெயரிலே கிராமங்கள் ஐந்து, மற்றைய நாலும் பூநகரியிலும், குருநாகர் பகுதியிலும் களுத்துறையிலும் உள்ளனவாம். இவ்வாறாக "நல்லூர்" என்ற சொல்லுக்கு பல சிறப்புக்களுண்டு. இத்தகைய சிறப்புக்களோடு நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் மூலஸ்தானத்தில் வேல் காணப்படுகின்றது.

## மூலஸ்தானத்தில் வேல்

வேல் முருகனது அருளை நல்கும் அருட்கருவியாகக் கருதப்படுகின்றது. வேல் ஞானத்தினதும் அறிவினதும் அடையாளம் வேலை வழிபடும் ஆதி மரபு இன்றும் தமிழர்களிடையே நிறைந்து நிலவி வருகின்றது.

இன்று நல்லூரில் மட்டுமின்றி, சொல்வச்சந்நிதியிலும், கதிர்காமத்திலும் முருக வழிபாடு உண்டு. இந்த ஆலயங்களின் மூலஸ்தானத்தில் அழகிய வேல் பெருமானாக வீற்றிருந்து அருள்பாலிப்பதுடன் நம்புவர்களுக்கு அபயமளிக்கின்றது. இதற்கு வேல் மகோற்சவ காலங்களில் வழிபாடுயாற்றப்பட்டு திருப்பவனியாக உலா வந்து வணங்கப்படுகிறது.

## அபயமளிக்கும் ஆறுமுகப்பெருமான்

நல்லூர் தெற்கு நோக்கி ஆறுமுகப்பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். அவரே தேரில் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்பாலிப்பார். ஆறுமுகப்பெருமானின் தோற்றம் பற்றி பலவிதமான கருத்துக்கள் கூறப்பட்டாலும் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமம், சத்தியோக சாதம் என்று சிவபெருமானுடைய ஐந்து முகங்களுடன் உமாதேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப்பெருமான் தோன்றினார் என்பது ஒரு கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுடைய ஐந்து முகங்களுடன் அதோ முகம் (கீழ்நோக்கிய முகம்) என்று சொல்லப்படும் பிரணவ முகத்தையும் சேர்ந்து ஆறுமுகத்திருவுருவம் எடுக்கப்பட்டதென்பது இன்னுமொரு கருத்து.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மேல், கீழ் என்ற எங்கும் நிறைந்த தன்மையைக் காட்டுவது ஆறுமுகம் என்பது மற்றொரு கருத்து.

## முருக தத்துவம்



முருகன் என்ற பேரழகு வாய்ந்த சிவகுமாரன் அழகிய நீல மயிலின் மேல் அமர்ந்திருக்கின்றார். அந்த மயிலின் காலடியில் நெளியும் கொடிய பாம்பு காணப்படுகின்றது. இப்படி ஒரு திருவுருவத்தை நாம் சர்வ சாதாரணமாகப் புத்தகங்களிலும் நாட்காட்டிகளிலும் பார்க்கின்றோம்.

அவ்வாறு பெரிய அதிக எடையுடைய கடவுள் அவரை விடப் பல மடங்கு எடைகுறைந்த ஓர் அழகுமிக்க பறவை மீது அமர்ந்திருப்பது எவ்வளவு பெரிய ஆலயமாக இருக்கிறது. ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரு உட்பொருள் உண்டு.

மயிலின் உருவம் அழகானது. இது தோகை விரித்தாடும் போது அதைவிட அழகாக இருக்கிறது. இதன் அழகுக்கு அழகூட்டுவது போல நீல வண்ணமுடையதாக உள்ளது. இத்தனை ரூபலாவண்யம் உள்ள மயில் ஆடும் போது அதற்கு இயற்கையாக ஏற்படுவது கர்வம்.

இதே போலத்தான் மனிதனும், தன்னுடைய அழகு, இளமை, செல்வம் இவற்றின் காரணமாகக் கர்வப்படுகிறான். தன்னால் எதையும் செய்ய முடியும் என்று எண்ணும் போது அவன் கர்வம் மேலும் கூடுகிறது. கர்வம் எங்கே இருக்கிறதோ அங்கே இறைசிந்தனை இல்லாமற் போய்விடுகின்றது.

இந்த நிலையில் இருந்து அவன், மாறியாக வேண்டும். அவனுடைய உண்மையான வடிவம் அவன் ஆத்மாவே தவிர அழகு, இளமை, செல்வம் அல்ல என்பதை அவன் உணர்ந்தாக வேண்டும். இப்படி அடங்காத மனதை அடக்கும் கடவுளாக, தலைவனாக இறைவன் இருக்கிறான் அதுதான் மயிலின் மீது குமரன்முருகன் அமர்ந்திருக்கும் திருக்காட்சி

இத்தகு வரலாற்று பெருமைகளோடு முருகன் நல்லூரில் பன்னெடுங்காலமாக அருளாட்சி புரிகின்றான். வைதாரையும் வாழ வைக்கின்றான். வேண்டுவார் வேண்டுவன வெல்லாம் வாரி வழங்குகின்றான்.

**வர்ணனைக்கலாநிதி**
**மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்**
**(பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரிலே நல்லைக் கந்தன் - கும்பிடுவோர் பெரும்பயன்

மகாவித்துவான் சித்தாந்த பண்டிதர்
பேராசிரியர், டாக்டர் கனகசபாபதி- நாகேஸ்வரன்
தமிழ்ப் பேராசிரியர், மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா.



வட இலங்கையில் "இலட்சணம்" என்பது நல்லைக் கந்தனது திருத்தலமேயாகும். வரலாற்றுச் சிறப்பும் தெய்வீகநலனும், ஆன்மிக அனுபவமும், அநுபூதிப் பெருமையுடையது நல்லூர்க் கந்தன் ஆலயம். நல்லைக் கிணையில்லை என்று பாடியுள்ளார். மொழிபெயர்ப்பாளரும் கவிஞருமான கோ.பத்மநாதன் இணையில்லாத் திருநகரைத் தலைமைப்பீடமாக இராசதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்தவர்கள் யாழ்ப்பாணத்து மன்னர்களான ஆரியச்சக்கரவர்த்திகள். ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் சமய இலக்கியங்களும், சோதிட, மருத்துவ நூல்களும், எருதுகள் பொறிக்கப்பட்ட நாணயங்களும் ஏற்பட்ட காலமாகும். "யாழ்ப்பாணாயன் பட்டினமருவிய பெருமாளே" என்பர் அருணகிரிநாத சுவாமிகள். செகராசசேகரம், பரராசேகரம் என்னும் நூல்கள் தோற்றம் பெற்றன. யாழ்ப்பாணத் தரகர்களாது ஆட்சி, அதிகாரம், ஆலய அமைப்புக்கள், இன்னும் பல்வேறு விடயங்கள் குறித்தும் பேராசிரியர்கள் கா.இந்திரபாலா, சி.பத்மநாதன் போன்றோரும் முதலியார் குல.சபாநாதன், செல்கையாழியன் போன்றோரும் சிறப்புடன் எழுதியுள்ளனர். பேராசிரியர் கலாநிதி வி.சிவகாமி அவர்களது நல்லூர் பற்றிய கட்டுரைகள் ஒவ்வொரு தமிழன்பர்களும் தேடிப்படிக்க வேண்டியவை. உண்மைகளையும், அதிசயங்களையும் அருளின் வீச்சினையும் கற்றறிந்துணர்ந்தபின் அதன் அனுபவமானது நடைமுறையிலேயே நெஞ்சிலே நீடி நிலைக்கும். பக்தி அனுபவம் என்பது சரியான பொருள், தேடித்தேடி அறிவினை விருத்தி செய்து, ஆன்மீக உண்மைத் தன்மைகளை வாழ்க்கையிலே ஒழுகிக் கடைப்பிடித்தல் என்பதுவே ஆகும். இந்த முறையிலே இவ்வாண்டின் நல்லைக்கந்தன் தேர் உற்சவம் தனித்துவமான சிறப்பினைப் பெறுகின்றது.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றிலே கல்வி வரலாறும், பக்தி சிறப்பு வரலாறும், தமிழ்மொழிப்புலமை வரலாறும், பண்பாட்டு வரலாறும் என்றுமே புகழ்ந்து மெய்ச்சிப் பேசத்தக்கன. மரபுக் கல்வியே இங்கு குறிப்பிடப்படும் கல்வி என்பதனை அறிதல் அவசியம். குழந்தை பிறந்து, பிஞ்சு மனங்களிலே உறையும் பண்பாட்டு நலன்களும், கடவுள் பக்தியும், வழிபாட்டு மரபும், திருவிழாக்களும், ஈடுபாடுகளும் எல்லாம் தெய்வீக நலனாலும், பயனாலும் அமைவன. நாவலர்ப்பெருமான் வளர்த்தெடுத்த கல்விப்பாரம்பரியமே யாழ்ப்பாணத்துக் கல்வி பாரம்பரியத்தின் நலனாகும். ஆயினும் இன்றைய சிந்தனையாளர்கள் தாம் கொண்ட குலக்கல்வியையே அனைவருக்கும் உயர்கல்விக்கழகத்திலே புகுத்தும் வித்தகம் யாழிலே ஒரு பெரும் நோயாகி அழிவு செய்து வருகின்றது. அதனால் நல்லையிலே நம்பிக்கையுடன் கும்பிடும் அடியார்களது நேரிய சிந்தனையென்று வலியுறுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது.

கல்வி நம்பிக்கையையும், கடவுள் உண்மையையும் மேலும் சரியான முறையிலே வளர்த்தெடுக்க வேண்டும். அதற்கான அறிவும், ஆளுமைகளும் உள்ளவர்களை முதன்மைப்படுத்தும் சீரமை பேணப்படவேண்டும். ஒழுங்கு முறை என்பது எதிலும் அமையும் பொழுது அழிவுகள் - அக்கிரமிங்கள் நேராது. இதனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணாத வரையிலே நிம்மதியும், உண்மையும் கண்டால் அர்த்தமற்றதாய்விடும். அறிவுஜீவிகள் அக்கிரமத்திற்குத் துணைபோகும் நிலைமை கவலைக்குரியது. நாகரீக்கோலம் கோயில் வழிபாட்டை ஏளனம் செய்து நிற்கிறது. அதுவே சரியானது என்று அங்கீகரிக்கும் சான்றோரே இன்று பெருமதிப்புப் பெற்ற அறிவாளிகளாக உள்ளனர். இச்சிந்தனை இன்று முதன்மை பெறுகிறது. முருகன் பேருளே தான் சரியானதை நெறிப்படுத்தி உணர்த்த வல்லது. நல்லைக்கந்தனது கீரத்தியம் விலாசமும் தெய்வீகச்சிறப்புடையன. உதட்டளவிலே மட்டும் உள்ளதல்ல. உணர்வு நலனோடும் புலமையோடும், அனுபவ உண்மையோடும் சம்பந்தப்பட்டதே நல்லைக்கந்தனது பேரருள்.

தேரிலே ஆறுமுகசாமி எழுந்தருளிம் தேர்த்திருவிழா என்பது அறிவுக்கும் - அறிவாயும், ஞானத்திற்கும் - ஞானமாயும் பெருமைக்குப் - பெருமையாயம் , பெருமிதத்திற்குப் பெருமிதமாயும், தனிமுதலுக்கு — தனிமுதலாயம் நின்று அருள் செய்யும் வேலனின் தனிப்பெருங்கருணையை மெய்யப்பிக்கும் ஒரு நிகழ்வாகும். நல்லைக்கந்தனின் தேர்த்திருவிழா என்பது ஞாலத்தின் மாணப்பெரிது விரதமிருந்து மனதிலே முருகக் கடவுளை ஆராதிப்போர். அநேகர் வாழும் இடம் யாழ்ப்பாணம். குடாநாடு முழுவதுமே நல்லைக்கந்தானின் திருத்தேர் உற்சவத்தை நீள நினைந்து வழிபடும் ஒரு நிலைமை உள்ளது. மக்கள் மயப்படுத்தப்பட்ட "முருக உள்ளுணர்வு " இன்றைய நல்லைத் திருத்தேர் விழாவிலே மேலிடம் வகிப்பது பேருண்மை.

கும்பிடப்பழகாமல் சிலர் இன்றும் வாழ்கின்றனர். இவர்கள் பகுத்தறிவாளர்கள் , சிந்தனைவாதிகள் , பேரறிவுடைந்தவர்டகள். தமது சிந்தாந்தமே முடிந்த முடிவு என்று பறை சாற்றி முன்னிற்போர். சிலர் இவற்றையெல்லாம் மெய்யென்று நம்பி உலகை ஏமாற்றுகின்றனர். உளநோயாளர்களான இவர்கள் கடவுள் மறுப்புக் கொள்கையாளர்கள் தெய்வத்தையே மனிதன் தான் படைத்தவன் என்பர். உன்னால் முடியும் என்பர். எனினும் தேரேறி வரும் ஆறுமுகமான பொருளான நிலைபேறுடைய பொருளை இருகரம் கூப்பிக் கும்பிடுவோருக்கு எல்லாமே விளங்கும். எளிதிலே புரியும் எது மெய்ம்மையென்று! "சமயசமசார்பின்மை" தான் நல்லது என்று கோமிடுவோர் ஒரு புறம். சமயமே சித்தங்களினை உண்டு பண்ணுவது என்போர் இன்னொரு புறம் சமயமே சாதி ஏற்றத்தாழ்வை இன்றும் பேணி அடிமைப்படுத்தி வைத்துள்ளதென்றும். வேறு சிலர் பெரும் பெரும் சிந்தனைகளை முன்வைப்பதுண்டு. இவற்றையும் "தொழுகுலம்" சரியான தடத்தில் நிறுத்தியே முடிவு கொள்ளும் நானே பெரியவன் நானே விண்ணன் என்பதனைக் கும்பிடும் தன்மையினால் பொசுக்கி விட முடியும். "அகந்தை மமதை கிறுக்கு பெருமிதம் உணர்வுகள் நீங்க வேண்டும் என்று யாராவது கருதுவீரகளேயானால் தலையிலேக் கையைக் கூப்பி வழிபட்டால் பயனுண்டாகும். கும்பிடுவதன் பயன் பரம்பொருள் உள்ளது என்பதனைக் குறிக்கும். மேலானதோர் மெய்ப் பொருள் "கடவுள்" என்ற பெயருடன் உள்ளது என்ற உணர்வு ஏற்படும் போது "அடைக்களம் என்ற உணர்ச்சி மேலிட்டு "எனது" என்ற நிலை மறந்து "நீயே" எல்லாம் என்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. இதனையே பலரும் கும்பிடும் போது அனுபவிக்கின்றனர்.

கும்பிடுவோர் மனதிலே இன்பவுணர்ச்சி உண்டாகுகிறது. வேற்றுமைகள் மறைகின்றன. உயிர்களின் சங்கமம் ஆனந்தந் தருகின்றது பேரருள் ஆன்மாவிலே பதிகின்றது. உளமகிழ்ச்சி ஏற்படுகிறது. மெய்யடியார் கும்பிடும் நிலையிலே தான் 'அடைக்கல தத்துவம்' உணரப்படுகிறது. அறிவு வேலவர் தந்நதது. உயிர் வாழ்வும் முருகன் தந்தது. மனைவி, மக்கள் நிலவுவன் செல்வம் புகழ் பதவி எல்லாமே வேலவன் - ஆறுமுகன் தந்தவை என்ற உளநினைப்பைத் தருவதே கும்பிடுவதால் அமையும் பலன்களாகும். தன்னலம் அறுக்கும் நிலையே கும்பிடுவது. எல்லாம் உனதருள் என்ற நிலைப்பு எப்போது உண்டாகிறதே அப்போதே தலையிலே இரு கரங்களும் உயர்ந்துவிடுகின்றான். கும்பிடுவரை இறைவன் கவனிக்கிறான், பார்கின்றன், பிணிநீக்கின்றன், அருள் செய்கின்றான், அறுதல்தருகின்றான். அன்பார்கள் கும்பிட்டபடியே "அறுதல் தருவாய் ஆறுமுக — உலகில் வேறு துணையில்லை வேல் முருகா" என்று பயபக்தியுடன் பாடுகின்றார். சைவப்பேறு பெற்றவர்களை "கும்பிடும்" மனிதர் பலரையும் நையாடி செய்து மகிழும் ஒரு கூட்டம் என்றுமே இருந்து கொண்டுதான் இருக்கும். இன்றைக்கும் யாழ்ப்பாணத்திலே நல்லூரிலேயும் இந்த ஏளனமும் எளிநகையாளரும் இருந்தே வருகின்றது. எனினும் அவராவர் நெஞ்சைத்தொட்டு கூறினால் இப்பண்பு உடையோர் நீண்ட நாள் வாழ்ந்தாக வரலாறு இல்லை. இது நாயன்மார் வரலாற்றிலும் யோகர்சுவாமிகள், செல்லப்பாசுவாமிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமிப்பட்டார், அருணாகிரிநாதர் வாழ்விலும் உண்டல்லவா? கும்பிடுவோர் அனைவரும் பழிப்பவரை நல்லைக்கந்தனிடமே முறையீடு செய்தால் விளைவு விரைவிலேயே தெரிய வரும் என்பது உண்மையாகும். இது அனுபவம்.

"நல்லை முருகனை நாளும் நினைத்வோர்க்கு
தொல்லை வினைகள் தூர விலக்கி விடும்" என்பது சிவயோக சுவாமிகள் திருவாக்கு.

"நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேன் – கிளியே
இரவு பகல் காணேனடி" என்று யோகர் சுவாமிகள் பாடியருளினார்.

தேர்த்திருவிழா பஞ்சகிருத்தியங்களிலே அழித்தல் தொழிலைக் குறிக்கிறது. எனவே இன்று ஆறுமுக சுவாமியை எண்ணி நினைத்துக் கும்பிடுவோர் எவற்றையெல்லாம் அழித்தொழித்துவிட வேண்டும் என்று சிந்திப்பது பெரும் பயன்பயப்பதாகும்.

"முப்புரம் என்பது மும்மலக்காரியம்" என்பர். மும்மலங்களை அழிப்பதே தேர்த்திருவிழா என்று குறிப்பார். ஆனால் அரசியலாகும் அதிகாரிகளும், பாதுகாவலர்களும், பஸ் கண்டக்ரர்களும், அசுரர்களான தெய்வ நிபந்தனைக் கல்விமான்களும் இன்னும் எத்தனைத் தேர்த்திருவிழாவைத் தரிசித்தாலும் ஆணவம் அழியுமா? என்பதே பெருங் கேள்வி. முருகக்கடவுள் சரியான தெளிவானதோர் முடிவினை எடுத்தாலன்றி இக்கொடுமையாளர்களைப் பிறர் ஏதுமே செய்துவிட முடியாத நிலைமையே நீடிக்கின்றது. ஓரடியார் பாடுவதுபோல,

"என்னகவியாடினாலும் உந்தன்மனம் இரங்கவில்லை"

இன்னும் என்ன சோதனையோ – முருகா என்று தான் பாட வேண்டும் போல் தோன்றுகின்றது. தேவர் சிறைமீட்டகல்லா நீவிர் கடைக்கண் வைத்தலன்றி வேறு எவ்வித மார்க்கமும் தெரியவில்லை அப்பனே!. எம்மைக் காத்தருளவேண்டுமென்று கும்பிடுவோர் விண்ணப்பித்து நிற்கின்றனர். நல்லைத் தேரில் வலம் வரும் சண்முகா! உம்மை எண்ணி நினைத்துக்கும்பிடும் அடியார் போலே நானும் கும்பிட வேண்டும். என்ற நிலையை நீயே என்னுள்ளத்தில் தந்தருள வேண்டும் என்றே வேண்டுகின்றேன் அப்பனே!. உலகு வாழ உண்மைக்கல்வி ஓங்க, பொய் மறைய, செழிப்பும் நலனும் அனைத்துயிர்களும் பெற்று வாழ, மேன்மைகொள் சைவநீதி விளங்குக அசுரர் குலம் அழிய, தேவர் குலம் வாழ நீரே இன்றைய தேர்த்திருவிழாவிலே அருள் சுரக்க வேண்டும். நல்லைக்கந்தா என்று சிந்தித்து வந்தித்துப்பிரார்த்தித்து வழிபடுவோமாக!.

---



# தியாகம்


தியானம் என்பது ஒவ்வொரு இந்துவுக்கும் தெரிந்திருக்கவேண்டியது. இதன் அடிப்படை மன அமைதியாகும். எனவே சந்தடியில்லாத வணக்க முறையை இந்துக்கள் பின்பற்றுவதன் மூலமே மன அமைதியையும் மகிழ்வையும் அடைந்துவிட முடியும் எம் முன்னோர் இதனை இயல்பாகவே அனுபவித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சலம் வந்தால் வரட்டும்

சஞ்சலம் வராமல் இவ்வுலகில் வாழவும் முடியுமோ? இவ்வுலகிற்பிறப்பதையே பிணியாகச் சொல்லப்பட்டிருக்கிறது பொழுது சஞ்சலத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? சஞ்சலம் வந்து கொண்டேயிருக்கும். ஆனால் அதனால் பாதிக்கப்பாடாமலிருக்கவும் வழி காட்டப்பட்டிருக்கின்றது. சற்குருவின் கடாட்சத்தாலும் மெய்யறிவைப் பெறுவதாலும் அவ்வழி எதுவெனவறிந்து அதைக் கடைப்பிடித்தொழுகுவோமாகில், சஞ்சலம் நம்மை அலைக்கவும் முடியாது. அசைக்கவும் முடியாது.



இவ்வுலகத்திலோ யாவும் அநித்தியம். இத்தேகம் அநித்தியம். பஞ்சபூதங்கள் அநித்தியம். ஐம்பொறி, ஐம்புலன்கள்,அநித்தியம். பெண்டிர்பிள்ளை அநித்தியம். பொருள்பண்டம் அநித்தியம் சீர்சிறப்பு அநித்தியம். பேர் புகழ் அநித்தியம். அதிகாரமும் செல்வாக்கும் அநித்தியம். எல்லாம் அநித்தியம். ஆகையால், இவைகளில் மயங்கிப் பற்றுவைப்பது சஞ்சலத்துக்கிடமாகும். இவை நாமல்ல.இவை நமக்கந்நியமானவை. கருமம் புரிவதற்கு இவைகள் உபயோகப்படுவன. அவைகளை அந்த உபயோகத்துக்குதவக்கூடிய நிலையில் வைத்துப் பேணவேண்டியது முறை. ஆனால் அவை நமக்கென்றும் வேண்டியவையுமல்ல. நம்மைவிட்டுப் பிரியாது என்றும் இருப்பவையுமல்ல. ஆகையால், மனத்தை விடயங்களில் அதிகஞ் செல்லவிடுவதால் சஞ்சலத்தை வரவழைப்பதல்லாமல் வேறொரு பிரயோசனமும் பெறமுடியாது.

யாக்கையே நிலையற்றபொழுது யாக்கை சம்பந்தமாக அநுபவிக்கும் சுகங்கள் நிலைத்தாலென்ன, நிலையா விட்டாற்றானென்ன? ஈற்றில் எல்லாம் அநித்தியமாகவே முடிகின்றது. ஆகையால் அநித்திய வஸ்துக்களில் பற்று வைப்பதில் ஒரு சுகமுமில்லை. கடைசியில் எல்லாம் சஞ்சலத்தையே வருவிக்கின்றன. ஒன்றும் பூரண வின்பத்தைக் கொடுப்பதாயில்லை. அவற்றின் சுகம் சிற்றின்பமாகவே முடிகின்றது. சிற்றின்பம் நிலையாத இன்பம். அதன் விளைவு துன்பம். அது நம்மைப் பந்தப்படுத்தும் இன்பம். உலக வாழ்வின் சஞ்சலங்களையெல்லம் கண்ட விவேகி அச் சஞ்சலங்களுக்குக் காரணமாயிருப்பனவற்றை ஒரு பொழுதும் நாடமாட்டான்.

நித்தியா நித்திய விவேகம் ஒன்றுமே மனிதனைச் சஞ்சலத்திலிருந்து மீட்கக்கூடும். நித்தியானந்த நித்திய வஸ்துவாகிய இறை எம்முடன் என்றும் உள்ளது. அது நம்மை விட்டு ஒரு காலத்திலும் பிரியாதது. அதை உணர்வதே வீடு. அதைப் புசிப்பதே பேரின்பம். அதில் சொக்குவதே இறவா இன்பம். அது குணங்குறியற்றது. அது ஒரு மாதிரியிலுமில்லை. அது ஆச்சிரமங்களில் தங்கியிருக்கவில்லை. சாதி, சமயம், தொழில் முதலியவைகளாலுண்டாகும் பேதங்களில் அது தங்கியிருக்கவில்லை எல்லோருக்குஞ் சமபாகமாயுள்ளது. எவரொருவருக்குஞ் சொந்தமானதன்று. எல்லாவற்றையும் மறந்து அதன் நினைவு ஒன்றேயிருந்தால் போதும். ஒரு துக்கமும், ஒரு சஞ்சலமும் நம்மைப் பாதிக்கமுடியாது.

கடவுள் ஒருவரே நித்திய வஸ்து. நாம் வேறு, கடவுள் வேறு எனுமெண்ணம் நமக்கொரு காலத்திலும் இருக்கப்படாது. நம்முடையதென்று ஒன்றையும் வைத்திருக்கப்படாது. நமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அவரிடத்தே ஒப்படைத்துப்போடவேண்டும். நான் என்ற நினைவேயிருக்கப் பாடாது. எல்லாம் அவருடைய தாய் விட்டு விட வேண்டியது. தனம், தானியம், பூமி முதலிய சகல சம்பத்தும் அவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்களிக்கப்பட்டன. எல்லாம்அவருடையது. நமக்கென்று எதுவிருக்கின்றது? நம்முடன் கூட வந்ததெது? நம்முடன் கூடப்போவதெது? ஒன்றுமேயில்லை. எல்லாம் வந்தவாறு ஏதோ மாயமாய்ப் போய் விடும். ஆகையால், நிலையற்ற பொருட்களில் மனத்தைச் செல்லவிடுவது சஞ்சலத்துக்கிடமாகும். அவற்றில் பற்று வைப்பது தவறு. ஏதுமொரு காலத்தில் அவைகள் நம்மை விட்டுப்பிரியவேண்டிவரும்அப்பொழுது சஞ்சலத்துக்கிடமாகும். பரம் ஒன்றே எக்காலத்தும் நம்மைவிட்டுப் பிரியாமலிருக்கின்றது. அது நித்தியமான பொருள். அன்றும், இன்றும்,என்றும் அது நம் உயிருக்குயிராய் நம்மறிவினுக்கறிவாய், நம்மை என்றும் அது நம் உயிருக்குயிராய் நம்மறிவினுக்கறிவாய், நம்மைவிட்டுப் பிரியாதிருக்கின்றது. வாழ்விலும் தாழ்விலும் இன்பிலும்,துன்பிலும், இறப்பிலும், பிறப்பிலும் நம்முடன் எக்காலத்துங்கூடவேயிருக்கின்றது. நமக்கு என்றும் வழிகாட்டுவதும் அதுவே. அதன் சந்நிதானத்தை விட்டு ஒரு காலமும் விலகமுடியாது. அஃது அப்படியேயுள்ள காரியம். எப்பவோ முடிந்த காரியம்.

எல்லாம் சிவன் செயல். உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம் இறைவனுடைய சந்நிதானத்தில் ஒரு பிழையுமுண்டாகாது.எங்களுக்கு அது வேண்டும் இது வேண்டும் என ஆசைப்பட வேண்டியதில்லை. எதைக் கடவுள் நமக்குக் கொடுக்கிறாரோ அதை நாம் சந்தோஷமாக ஏற்க வேண்டியது. கடவுளுடைய ஆசீர்வாதம் நமக்கெப்பொழுதும் உண்டு. அதைப்பற்றி நமக்குச் சற்றேனும் ஐயமிருக்கப்படாது. சில காரியங்கள் நமக்கு விளங்காமலிருக்கலாம். அதையிட்டு நாமேன் கவலைப்படவேண்டும்? எல்லாம் கடவுளுடைய சித்தத்தின்படி நடந்துகொண்டு போகின்றன. நாமொன்றுமறியோம். எல்லாம் அவர் அறிவார். எமது கடன் பணி செய்து கிடப்பதே. இறைவன் சந்நிதானத்தில் நாம் என்றுமிருப்பதால் நமக்கொரு குறையுமில்லை. நமது செயல் ஒன்றுமில்லை. எல்லாம் ஈசன் செயல்எனும் உணர்ச்சி நாளாந்தம் வளர்ந்துகொண்டு போக "ஒரு பொல்லாப்பும் இல்லை" எனும் மகா வாக்கியத்தின் உண்மையை நாம் உணரக்கூடியதாய் வரும். திடபக்தி வேண்டும். கடவுளிலே பூரண விசுவாசமிருக்க வேண்டும். அதவிடச் சிறந்த கவசம் வேறொன்றுமில்லை. என்ன வந்தாலும் அசையாமலிருக்கப் பழகவேண்டு.

"சஞ்சலம் வந்தாலும் வரட்டும் - வேல் வேல் சற்றும் அலையாமல்
சாந்தத்தில் கட்டு - ஒரு பொல்லாப்புமில்லை"

---

## பகவத்கீதை

கீதையில் கண்ணன் மனிதர்களுக்கு மூன்று குணங்கள் உண்டென்கிறார்.

அவையாவன: சத்துவகுணம், ராஜோ, குணம், தாமோ குணம் என்பனவாகும்.

இம் மூன்று குணங்களைப் பொறுத்தே மனமும் உடலும் அமையும். உடல் ஆன்மா மீது ஆதிக்கம் செலுத்துகின்றது. ஆனால் ஆன்மா உடலை ஆதிக்கம் செய்ய முடியாது போராடுகிறது. ஐம்புலன்களால் வரும் இச்சைகளைத் தீர்க்கும்படி உடல் மனதை வற்புறுத்துவதால் தான் மேற்சொல்லப்பட்ட வையெல்லாம் நடைபெறுகின்றன. மனம் உடலைக் கட்டுப்படுத்தினால் தீமைகள் வரவாய்ப்பில்லை. சத்துவ குணமுள்ள மனிதன் ஆன்மாவைக் கட்டுப்படுத்தி தனது ஆதிக்கத்துள் வைத்திருப்பான். ராஜோ குண மனிதன் ஆன்ம ஈடேற்றத்தைப்பற்றிச் சிந்திக்காது ஐம்புலன்களாலும், சகலவிதமான இன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பான். உடலின் மீது அவனுக்கு அதீத பற்றிருக்கும். தாமோ குணமுள்ளவன் ஆன்மா, உடம்பு இரண்டையும் பற்றிய உணர்வுகளும் இல்லாமல் வாழ்வான்.கல்வி அறிவும், உடல் மீது பற்றில்லாத தன்மையும், புலனடக்கமும் எந்த விடயத்திலும் அக்கறைப்படாத தன்னையும், எல்லாம் கடவுள் செயல் என்று எண்ணும் தன்மையும் கொண்ட சத்துவ குணமுள்ள மனிதன் தீயவற்றை நினைத்துக்கூடப் பார்க்கமாட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆலயங்களில் சென்று சுவாமியைத் தரிசிக்கும்போதும், பெரியவர்கள் ஆறுதல் வார்த்தை கூறுகின்றபோதும் அமைதியடையும் மனம் பின் அமைதியிழந்து துன்பப்படுவதற்குக் காரணம் என்ன?**

இதற்குக் காரணம் நம்பிக்கையீனமே. ஆலயங்களில் கடவுளை வணங்கும்போது "கடவுள் எனது துன்பங்களை நீக்குவார்" என்று நம்புவோர் வீட்டிற்க வந்ததும் அந்த நம்பிக்கை இழந்துவிடுகிறார்கள். பெரியவர்கள் கூறும் வார்தைகள் அவர்கள் கூறும் போது துன்பத்தைக் குறைக்கும். உண்மையான நிலையை எடுத்துரைக்கும். அதனால் மனம் அமைதியடையும். பெரியவர்கள் விலகியதும் துயர நினைவுகள் மீண்டும் மனதைப் பற்றிப் பிடிப்பதால் பெரியவர்கள் கூறிய வார்த்தைகளில் நம்பிக்கை இல்லாது போய்விடும்.

கடவுளின் கிருபையால் தான் ஒருவனுக்கு இன்பமான வாழ்வு கிட்டும் என்ற உண்மையைப் புரிந்துகொள்ளல் வேண்டும். துன்பங்கள் வரும் நேரத்தில் கவலைப்படுவதாலோ நம்பிக்கையீனப்படுவதாலோ துன்பங்கள் குறையப்போவதில்லை. எரியும் விளக்கு அணைய முன் அது ஏன் அணையப்போகிறது என்று நினைத்து அது அணையாதபடி விளக்கிற்குத் தேவையானவற்றை ஈடுசெய்தல் வேண்டும். அது போலத் துன்பம் வரும்போது கடவுளின் மீது அதீதமான நம்பிக்கை கொள்ளல் வேண்டும்.

பெரியவர்களது வார்த்தைகள் வலிமையானவை. உயிருள்ளவை. வாடியபயிருக்கு நீர் பாய்ச்சுவதைப்போன்றது அவர்களது வார்த்தைகள் அதனால் அவர்களது வார்த்தைகளைத் துன்பங்கள் நேரிடும் போது மனதில் இருத்தல் வேண்டும்.மனிதன் துன்பத்தை இலகுவாக வெல்ல முடியும். எதைச்செய்கிறாயோ அதை நன்மை உள்ளதாகச்செய் எதைச்செய்ய இருக்கின்றாயோ அதையும் நன்மையுள்ளதாகச் செய் உன்னிடமுள்ள அனைத்தையும் இழக்கத் தயாராக இரு. ஏனெனில், நீ எதையும் கொண்டு வரவில்லை. கொண்டு வராதவையை இழந்ததற்காக ஏன் கவலைப்படுகிறாய்?

நீ எதைப்பெற்றாயோ அவையெல்லாம் இறைவனால் உனக்குத் தரப்படடது.
நீ எதைப்பெற்றாயோ அவையும் இறைவனால் உனக்குத் தரப்பட்டது.
நீ கொடுத்ததெல்லாம் இறைவன் உனக்குக் கொடுத்தது.
நீ பெறுவதெல்லாம் இறைவன் உனக்குக் கொடுப்பது

மனிதன் எதையும் படைத்ததில்லை. அதுபோல மனிதன் எதையும் இழந்ததில்லை. உன்னுடையது இன்னொருவனுக்குச் செல்கிறது. வேறொருவனது மீண்டும் உன்னிடம் வருகிறது. இழப்பும், சேர்ப்பும் அடிக்கடி மாற்றமடையும். இது தான் உலக நியதி.

---

## தினமும் கடைப்பிடிக்க வேண்டிய மதக்கடமைகள் எவை?

நீங்கள் மதத்தைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? மதம் என்பது காசு பறிக்கும் ஒரு நிறுவனம் என்றா நினைக்கிறீர்கள்?

மனிதனை ஒழுக்கமுள்ளவனாக்குவதும், ஒழுக்கமுள்ளவனைத் தெய்வத் தன்மைக்கு உயர்த்துவதும் தான் மதத்தின் கடமை. சுயநலமில்லாமல் வாழ்தல், மதவாழ்க்கை, நம்பிக்கையோடு வாழுதல் மதவாழ்க்கை,பிற உயிர்கள் படும் துன்பங்களைக் கண்டு இரங்குதல் மதவாழ்க்கை, உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுடன் அன்னியோன்னியமாக வாழ்தல் மத வாழ்க்கை, கிடைத்ததைப் பகிர்ந்துண்டு வாழ்தல் மதவாழ்ககை, விட்டுக் கொடுத்து வாழ்தல் மதவாழ்க்கை இது தான் மதம். இதை உணர்வது தான் மெய்உணர்வு

## கடவுளை நம்புவோர் காலநேரம், சகுனங்களை பார்க்கலாமா?

திருஞானசம்பந்தரின் கோளறு பதிகத்தைப் படித்து விட்டு எதையும் செய்யலாமென்ற ஞானிகள் கூறுகின்றார்கள்.

**"வேயுறுதோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி மாசறு திங்கள் கங்கை
முடிமேல் அணிந்து, என் உளமே புகுந்த
அதனால் ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்
வியாழன் வெள்ளி சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசுஅறும், நல்லதல்ல அவைந ல்லதல்ல
அடியார் அவர்க்கு மிகவே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தரின் மொழிக் கையாளுகை

இவ்வாறு சீவான்மாக்களாகிய உயிரகளினதும் செயற்பாடுகளையும் குறிக்கவல்ல மொழியைக் கையாண்டு சம்பந்தர் எவ்வாறு வெற்றிகரமாகக் கடவுளைச் சுட்டுகின்றாரென்பதை மொழியியல் நோக்கில் அவதானிப்பு சுவாரசியமானதாகும். பல விடயங்களையும் இவ்விடத்தில் நோக்குதல் இயலாதென்பதால் அவரது முதற் பாடலில் விளங்கித் தோன்றும் ஓரம்சம் இவ்விடம் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

**" தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதி சூடி**
**காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங் கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்தேத்த வருள் செய்த**
**பீடுடைய பிரம புரமேவிய பெம்மான் இவனன்றே..."**

இம் முதறபாடலின் முதற் சொற்றொடர் கவனத்துக்குரியது. இங்கு வழங்கியிருப்பது போல செவியன் என ஆண்பாலில் வழங்கும் பெயருக்கு தோடு எனும் ஆபரணப்பெயரை இணைத்து வழங்குதல் மரபில்லை. தோடு எனபது பயன்படுத்தபக்பட வேண்டுமாயின் தொடரும் பெயர் செவியன் என அமைந்திருக்க வேண்டும். செவியன் என ஆண்பால் முற்றுக் கொடுக்கப்பட்ட வேண்டுமாயின் முன்பு குழை என வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் சம்பந்தரோ இவ்விரு பதங்களையும் இணைத்து , தோடுடைய செவியன் என்று பாடிச் செல்கிறார். இவ்வாறு பாடுவது மரபுக்குப் பொருந்ததாது என்ற போதும் பாதிகிய சிவமும் அச்சிவத்தின் இயக்குவல்லமையாகிய சக்தியும் இணைத்த நிலையில் காட்டப்பட வேண்டு மெனும் நோக்கில் சம்பந்தர் இவ்வாறு வழங்குவது அவதானிக்கத்தக்கது.

**"விடையேறி"**
**"தூவெண் மதிசூடி"**
**"காடுடைய சுடலைப்பொடி பூசி"** என்பன. இம்மூன்றும் சொற்றொடர்களையம் பரமபதியாக தாம் கருதும் சிவனுக்குரியதாக வழங்க நினைந்துள்ள சம்பந்தர் , இவற்றைப் பெயர்சசொற்களாக அமைத்துக் காட்டியுள்ளார். விடையேறி , மதிசூடி , பொடிபூசி என்பன பெயர்ச்சொற்களாய் நின்று சிவனைக் குறித்த வண்ணமுள்ளன இன்றும் கூடி சாதாரண உலக வழக்கில் காணப்படும்.மன்றுளாடி , பிறைசூடி போன்ற மக்கட் பெயர்கள் இவ்விடத்தில் ஞாபகிக்கத்தக்கன.

முன்பு தோடுடைய செவியன் என்ற பதத்தின் மூலம் எவ்வாறு நிலைத்த சக்தியாகிய சிவமும் அதன் இயங்கும் வல்லைமையாகிய சக்தியும் ஒன்றாகவே உணர்த்துவதற்குச் சம்பந்தர் கையாளும் வழிமுறை மொழியியல் முக்கியத்துவம் நிறைந்தது.

நிலைத்த சக்தியாக விளங்கும் சிவத்தை வெளிப்படுத்த மேற்கொண்ட மூன்ற பதங்களையும் பெயர்சசொற்களாக வழங்கிய சம்பந்தர் , அம்மூன்று பெயர்ச்சொற்களையுமே வினையெச்சங்களாகவும் விளங்குமாறு வழங்கி இயங்குவல்லமையாகிய சக்தியையும் நுட்பமாக வெளிப்படுத்துகிறார். இயங்கு சக்தியினை வினைப்பதங்களின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துகின்ற தன்மை நுண்மையானது. எவ்வாறு மேற்கொண்ட பெயர்சொற்களை வினையெச்சங்களாகவும் பயன்படுத்துகிறார் என்பதனை இத்தேவாரப் பகுதிக்கு வழங்கப்படும் பின்வரும் உரையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

> **"தோட்டையுடைய செவியன் உடையவன் ஆகி, இடப வாகனத்தின்மேல் ஊறி , தூய வெள்ளிய பிறையைத் தலையில் வைத்து, சுடுகாடு பெற்ற சுடுதலையுடைய திருநீற்றைப்பூசி வந்து என் உள்ளைத்தைக் கவர்ந்த கள்வன்"**

இங்கு விடையே, மதிசூடி , பொடிபூசி மூன்றும் வினையெச்சங்களாக வழங்கப்படுவதனைக் காணமுடியும். தமக்கு அருள் செய்தவர் நிலைத்த சக்தியாகிய சிவமும், இயக்குவல்லைமையாகிய சக்தியும் இணைந்தோர் உருவினர் என்பதனை உணர்த்த இவ்வாறு பெயர்சசொற்களாகவும் அதேவேளை வினையெச்சங்களாகவும் அமையவல்ல சொற்றொடர்களைப் பயன்படுத்தியுள்ளார் சம்பந்தர்.

எனினும் , பதி குறித்த சொற்களை வினையெச்சங்களாகப் பயன்படுத்தும் போது ஏற்படவல்ல இடர்பாடுகள் சிலவற்றை அவதானித்தல் அவசியமே. காலத்துவங்கடந்த பதியினுடைய செயற்பாடுகளை , விடையேறி முதலிய பதங்களால் வழங்குவதனால் ஏற்படவல்ல முதலாவது இடர்பாடு , பதியினுடைய செயல்களும் ஒன்றன்பின் உன்றானாகவே நடப்பது போன்ற புலக்காட்சியை அவை ஏற்படுத்துவதாகும்.

தோடுடைய செவியனான் , விடையில் ஏறி (பின்) மதியைச் சூடி (அதன்பின்) பொடியைப் பூசிவந்து எனது உள்ளத்தைக் கவர்ந்தான் என்பதே மேலோட்டமாக வெளிப்படுத்துகின்ற பொருளாக இருக்கிறது. ஊதரணமாக , அவள் பவுடர்பூசி , மலர்சூடி, சைக்கிள் ஏறி வந்தாள் எனும் வாக்கியத்தைக் கவனித்துப் பார்த்தால் ஏற்படவல்ல இடர்பாடு இலகுவில் புரிந்து விடும். இங்கு அவள் எனும் எழுவாய் முதலில் பவுடர் பூசியதாக காட்டப்படுகிறது. அதன்பின்பு மலர்சூடியதாகவும் அதற்கு முன்பு சைக்கிள் ஏறியதாகவும் காட்டப்படுகிறது. இதன்படி அவள் பவுடர் பூசும் போது மலர் சூடியிருக்கவில்லை. மலர் சூடிய போது சைக்கிள் ஏறியிருக்கவில்லை. செயல்கள் ஒன்றன் பின் ஒன்றாகவே நடைபெறுகின்றது.

இத்தகையயொரு பொருட்புலப்பாட்டை தரவல்ல விடையேறி மதிசூடி , பொடி பூசி ஆகிய பதங்கள் தரும் அர்த்தத்தை மேற்கண்ட உதாரணம் போல சாதாரண மானிட செயற்பாடுகளாக – ஒன்றன் பின்னாக நடந்தவையாக – கொள்ள முடியாது. அதாவது உதாரணத்தில் கண்டது போல முதலில் விடையேறினான் எனவும், விடையேறிதன் பின் மதி சூடினான் எனவும், மதிசூடியதன் பின் பொடிபூசினான் எனவும் கொண்டால், அது , பரமபதியின் எல்லையற்ற தன்மைக்கு இழுக்காகிவிடும். விடையேறிய பின்பே மதிசூடினான் என்றால் அவன் முன்பு மதிசூடியிருக்கவில்லை என்றாகும். இது எக்காலத்தும் எவ்விடத்தும், எதையும் செய்யவல்ல பரம்பொருளின் எல்லையற்ற செயற்றினை ஓர் எல்லைக்குட்படுத்துவதாகவே விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடத்தில் வினையெச்சங்களாக மேற்படி சொற்றொடர்கள் அமைந்து பரம்பொருளின் செயற்பாடுகளைப் புலப்படுத்தும் சந்தர்ப்பத்தில் ஏற்படவல்ல இன்னுமொரு இடர்பாடு அவதானிக்கப்பட வேண்டியுள்ளது. சுட்டும் வாக்கியத்தில் காணப்படும் வினையெச்சத் தொடரோ அல்லது முற்றுவினைத் தொடரே ஏதேனுமொரு காலத்தை உணர்தினால் குறித்த வாக்கியம் இக்கால எல்லைக்கு மாத்திரம் அர்த்தம் தருவதாய் அதன் பொருள் சுருங்கிவிடும்.

**உதாரணமாக**

அவன் (நண்பனை) கண்டு பேசி வந்தான்.

அவன் (நண்பனோடு) கதைபேசி (யபடி) வந்தான் என்பவற்றை நோக்கலாம்.

முதலில் அவன் (நண்பனை) கண்டு பேசி வந்தான் என்பதை நோக்கலாம், இங்கு வந்தான் என்னும் முற்று வினை இறந்தகால வினையாக இருப்பதனால் கண்டு , கதைபேசி என்னும் வினையெச்சங்கள் குறிக்கும் வினைகள் அதற்கு முன்பே நடந்து முடிந்துவிடுகின்றமை புலனாகும். இரண்டாவது உதாரணத்தை நோக்கினால் முற்று வினை நிகழந்து முடியம் வரை எச்சவினை சுட்டும் செயல்நடைபெற்று வந்து காட்டப்பட்டுள்ளது. ஆனால் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நடைபெறுவது குறித்து குறிப்பிடவில்லை.

இவற்றின் மூல வினையெச்சங்கள் பயின்று வருகின்ற வாக்கியங்கள் , எச்சவினை, முற்றுவினைகளால் ஏதோவொரு கால எல்லைக்குள் அடங்கிவிடத்தக்கனவாக விளங்குவது புலனாகிறது. இவ்வாறான இயல்புடைய வாக்கியதன்மை கொண்டு முற்காலத்துள் குறித்தவொரு கால எல்லைக்குள் அடங்கமாட்டாத பதியினுடைய செயற்பாடுகளைக் குறிப்பது என்பது மிகவும் சவாலானதொரு விடயமே.

சவால் தரும் இவ்விடத்தில் சம்பந்தர் மொழியியல் நுட்பத்தோடு வழங்கியிருக்கின்ற வார்த்தைப் பிரயோகமானது மேலே கண்ட எந்த இடர்பாடுகளையும் தோற்றுவிக்காமல் பதி இலக்கணத்தை ஊறு படுத்தாமல் விளங்கி அவருடைய எல்லையற்ற மொழியாளுமையை விளங்கி நிற்கிறது. " விடையேறி... வந்தான்" எனச் சம்பந்தர் வழங்கியிருந்தால் இறந்தகால எல்லைக்குள் அடங்கி ஏனைய இரு காலங்களையும் தழுவாமல் இவ்வாக்கியம் முற்று பெற்றுருக்கும். இவ்வாறே தாம் ஏனைய பல பிரயோகங்களும் முற்காலங்களுள் ஏதோவொன்றுக்குள் அடங்கியிருக்க வல்லனவாகவே விளங்கியிருந்திருக்கும்.

ஆனால், சம்பந்தரோ "விடையேறி... உள்ளங் கவர்கள்வன்" என்று முடிக்கின்றார் இவ்வாறே "மதி சூடி உள்ளங்கவர் கள்வன்" , " பொடி பூசி உள்ளங்கவர் கள்வன்" என்பனவும் குறிப்பிடப்படுகின்றன. இங்கு வினையெச்சங்களும் முற்று வினையாக அவர அமைத்துள்ள கவர்கள்வன் எனும் தொடரில் நுட்பம் மிகுந்த கவனத்துக்குரியது. இவ் முற்று வினையை இறந்தகால வினையாகவோ, நிகழ்கால வினையாகவோ எதிர்கால வினையாகவோ மட்டும் அமைக்காமல், இம்மூன்று வினைகளும் சொல்லத்தக்க வினைத்தொகையாக அமைத்துவிடுகிறார்.

இதன்விரிவு,

உள்ளங்கவர்ந்த கள்வன்
உள்ளங்கவர்கின்ற கள்வன்
உள்ளங் கவரும் கள்வன்

என ஆகும். இதன்விரிவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்கவர்ந்த கள்வன்
விடையேறி ———————— உள்ளங்கவர்கின்ற கள்வன்
உள்ளங் கவரும் கள்வன்

உள்ளங்கவர்ந்த கள்வன்
மதிசூடி ———————— உள்ளங்கவர்கின்ற கள்வன்
உள்ளங் கவரும் கள்வன்

உள்ளங்கவர்ந்த கள்வன்
பொடிபூசி ———————— உள்ளங்கவர்கின்ற கள்வன்
உள்ளங் கவரும் கள்வன்

என ஆகும். இவ்வாறு தனித்தனியே ஒவ்வொரு காலத்திற்கும் விரியவல்ல வினைத்தொகையை ஒவ்வொரு வினையெச்சத்தோடும் பொருத்திக் காண, பரம்பொருளின் எல்லையற்ற தன்மையை எவ்விடத்திலும் ஊறுபடுத்தாது வெளிப்படுத்தியிருக்கும் சம்பந்தரின் மொழிக் கையாளுகையின் நுட்பம் புலனாகும்.

நன்றி

ஆக்கியோன் -ஸ்ரீ.பிரசாந்தன்

பக்தி நெறியும் பண்பாட்டு கோலங்களும்

வெளியீடு- இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்


**Laptop Repair**

***Services & Accessories***

- *Software & Hardware Issues*
- *Keyboard, Replacement Motherboard Repair*
- *Software, Memory Harddrive, Replacemen*



**Hotline :- 0773757909
0765234527**

***No :- 52 Palaly Road, Thirunelvely North, Jaffna.***

***Mikunthan90@gmail.com***

**சிவதயா அச்சகம்**

***Sivathaya Printing works***

கணனி தட்டச்சு வேலைகள், ஓவ்செற் பிறிண்டிங், லெமினேற்றிங் புத்தகம் கட்டுதல், போட்டோ கொப்பி மற்றும் சகல விதமான அச்சு வேலைகளுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்





**T.P No :- 0774262695
0773965214**

நாச்சிமார் கோவிலடி,
கே.கே.எஸ் றோட்
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இந்தியா
## இலங்கைக்கிளை (அங்கீகரிக்கப்பட்டது.)
## Accredited with "A" Grade by NAAC

### கல்வியியல் BA,MA பட்டப்படிப்புக்கள்

(அனைத்துகற்கைநெறிகளும் இலங்கைபல்கலைக்கழகமானியஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவை.)

- வரலாற்றில் புகழ் பெற்ற இந்திய பல்கலைக்கழகமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1921 இல் ஆரம்பிக்கப்பட்டது.
- இலங்கை முழுவதற்குமான அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம் எமது நிறுவனமாகும்.
- தேவையான ஆலோசனைகள் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களால் வழங்கப்படும்
- எமது உயர்கல்விநிறுவனத்தில் 2017ம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
  - * விண்ணப்பங்களும் பதிவுகளும்
  - * கற்பித்தல் மற்றும் வசதிகள்
  - * பரீட்சை ஏற்பாடுகள்
  - * பெறுபேறுகளும் சான்றிதழ் பெறுதலும்

## கற்கை நெறிகள்

**1. BA Education**
**2. MA Education**
**3. BA. Early Child hood Education**
**4. B.com. B.sc. BA,BBA.BPA**
**5. M.com,M.sc. MBA,MPA**
**6. Fine Arts (Music Vocal, Dance )**
**7. BLIS**
**8.Engineering & IT Courses**

### *ஏனைய கற்கை நெறிகள் அலுவலகத்தில் பெறலாம்*

### விரிவுரையாளர்கள்

பேராசிரியர் மா.சின்னத்தம்பி
கலாநிதி .ஜெ.இராசநாயகம்
பேராசிரியர்:- சோ.சந்திரசேகரம்

### கல்வி முகாமைத்துவச் சபை

பேராசிரியர் மா.சின்னத்தம்பி
திருஅ.பஞ்சலிங்கம் (தகைசார் அதிபர்)
திரு.ப.முகுந்தன் (இணைப்பாளர்)

Sri Lanka Qualification Frame work (SLQF)ன்படியான அங்கீகரிக்கப்பட்டவிதிகளின் படி கற்கைநெறிகள், பரீட்சைகள் நடாத்தப்படும்.
பரீட்சைகள் இலங்கையிலேயே நடாத்தப்படும்



விண்ணப்பபடிவங்களை அலுவலக நேரத்தில் கீழே தரப்படும் விலாசத்தில் உள்ள எமது அலுவலகத்தில் பெற்றுவிண்ணப்பிக்க முடியும்.

தொடர்பு:-

Administrative Officer
Jaffna Academy of Tertiary Education
No.115, Thirunelvely North
(Opposite of **Old DS Office-Nallur**)
Jaffna
**T.P No: - 021-221-5137**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org